| O.S.No. 208/2024 | DW2: திருமதி. இந்திரா<br>க/பெ. திரு. சண்முகம் | 23-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆவேன். எனது மகன் 2-ம் பிரதிவாதி. எனது கணவர் பெயர் சண்முகம். எனது கணவர் 2022-ல் இறந்துவிட்டார். எனது கணவரின் இறப்பு சான்றிதழை வாங்கினோம், வாரிசு சான்றிதழை வாங்கவில்லை. எனது மாமியார் ஆதார் கார்டு கொடுக்கவில்லை என்பதால் வாங்கமுடியவில்லை. எனது மாமியாரும் என் கணவருக்கு ஒரு வாரிசு ஆவார். குழாய் வரி, வீட்டு வரி, மின் இணைப்பு ரசீது ஆகியவை இறந்த என் கணவர் சண்முகம் பெயரில் வருகிறது என்றால் சரிதான்.

2. எனது கணவர் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் கணவர் எனது அத்தை மகன். எனக்கு 1995-ல் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது என் கணவர் பால் வியாபாரம் மற்றும் கூலி வேலை செய்தார். என் கணவருக்கு போதிய வருமானம் இல்லை என்பதால் 2000-ல் பாண்டிச்சேரிக்கு வேலைக்கு சென்றுவிட்டார். என் கணவருக்கு அவரது தாத்தா எழுதிய சொத்தினை தனிப்பட்ட முறையில் என் கணவர் விற்பனை செய்தார். என் கணவருக்கு அவரது தாத்தா என் கணவர் 15 வயது இருக்கும்போது சொத்து எழுதி வைத்தார்.

3. வா.சா.ஆ.21-ல் என் கணவருக்கு 15 வயது இருக்கும்போது சொத்து அவரது பெயரில் கார்டியனைக் கொண்டு கிரையம் பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் கணவர் மைனர் என்பதால் அவருக்கு எந்த வருமானமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 ஆவணம் தாத்தா எழுதி வைத்ததாக இல்லை என்றாலும், தந்தை எழுதி வைத்ததாக உள்ளது என்றாலும் சரியல்ல.

4. எனது கணவருக்கு 66 செண்ட் வா.சா.ஆ.1-ன் மூலம் வந்த நிலையில் என் கணவர் 2007-ல் 67 செண்ட்டினை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் குழந்தைகளுக்கு எப்போது காது குத்தினோம் என்று ஞாபகமில்லை, பூர்வீக சொத்தினை விற்றுதான் காது குத்தினோம். எனது கணவர் இடம் வாங்கியதற்கு முன்னர் காது குத்தப்பட்தா அதற்கு பின்னர் காது குத்தப்பட்டதா என்று ஞாபகமில்லை. சந்தோஷ்குமார் எனது மச்சினர். எனது மச்சினனின் மாமனார் பெயர் நாராயணபிள்ளை. அழைப்பிதழ் அடித்துதான் காது குத்தினோம். வா.சா.ஆ.23-ல் நாராயணப்பிள்ளை, பெருமாள்பிள்ளை பெயர் இல்லை என்றால் அப்போது அடிக்காமல் விட்டுவிட்டார்கள். வா.சா.ஆ.23 அழைப்பிதழானது பொதுவாக போடப்பட்டது. எங்களது கூட்டுக்குடும்ப சொத்தினை விற்று பொதுவில் காது குத்தினோம். கூட்டுக்குடும்ப சொத்தை விற்றுதான் காதணி விழா நடத்தினோம் என்றாலும், 20.03.2002 சொத்தினை கிரையம் வாங்கினோம் என்றாலும் சரியல்ல.

5. வா.சா.ஆ.24 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.24-ல் சாமிநாத பிள்ளை, பெருமாள் பிள்ளை இருவரும் என் கணவருக்கு கிரையம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.24 ஒரு கிரைய ஆவணமே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24-ல் முழு கிரைய பணமும் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.24 ஏற்புடைய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.21 முதல் வா.சா.ஆ.24 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.23 12:07:09 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**